# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre Homebush Inc.

PO Box 4032, Homebush, NSW 2140.

www.tsch.org.au
homebushtsch@gmail.com


## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 4

அனைவருக்கும் வணக்கம்

### தமிழர் அடையாளம்

நாம் ஒருவரை எப்படி அடையாளம் காண்கிறோம்? அவர் பேசும் மொழியினைக் கொண்டு அடையாளம் காண்கிறோம். ஒவ்வொரு இனத்திற்கும் மொழி, பண்பாடு, கலைகள் என்பன உள்ளன. நாம் தமிழர். எமக்கும் மொழி, பண்பாடு, கலைகள் என்பன தனித்துவமாய் இருக்கின்றன.

நாம் வீட்டில் தமிழ்மொழி பேசுகிறோம். ஆலயங்களுக்குச் செல்லும்போதும், ஏனைய விழாக்களுக்குச் செல்லும்போதும் பாரம்பரிய உடைகளை அணிகிறோம். வீடுகளில் பாரம்பரிய உணவுகளை உண்கிறோம். விழாக்களில் பாரம்பரிய இசை, நடன நிகழ்ச்சிகளை நடாத்துகிறோம். இவை எல்லாம் எமது அடையாளங்கள் ஆகும்.

எமது பண்பாட்டு அம்சங்களில் விருந்தோம்பலும், நன்றியறிதலும் முக்கியமானவை. அதனைப் போலவே குடும்ப உறவுகளும், சமூக உறவுகளும் முக்கியமானவை.

எமது பண்பாட்டு அம்சங்களைப் பேணி, தாய்மொழியைப் பேசி வாழ்ந்தால் எமது அடையாளத்தைப் பேணலாம். எமது அடையாளத்தைத் தக்க வைக்கலாம். எமது அடையாளத்தைப் பேணுவோம். தமிழர் என்று தலை நிமிர்ந்து வாழ்வோம்.

நன்றி

வணக்கம்